# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 28/2022 நாள்.17.04.2026

### DW1- திருமதி. பரிமளா, க/பெ. திரு. சேகர்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Com. எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. வங்கி கணக்கு நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஏனென்றால் 2014க்கு பிறகுதான் கணக்கு உள்ளது. எனக்கு எப்போது திருமணம் என்றால் 2001. 2001 முதல் 2004 வரை எனக்கு என்ன வருமானம் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பி.சா.ஆ.1 தாவா சொத்து வாங்குவதற்கு கொடுக்கபட்டதா என்றால் ஆமாம். அந்த சமயத்தில் என் கணவர் வெளிநாட்டில் இருந்தார் என்றால் ஆமாம். தாவா சொத்து தவிர வேறு சொத்து என்பெயரில் உள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ. 3 2014, 2015 ஆண்டுக்குரியதை தாக்கல் செய்துள்ளேனே அது எதற்காக போட்டேன் என்றால் எனது சகோதரன் எனது கணவருக்கு தாவா சொத்தில் வீடு கட்ட பணம் அனுப்பியதை காண்பிக்க தாக்கல் செய்துள்ளேன். என் சகோதரர் எங்குள்ளார் என்றால் வெளிநாட்டிலுஉள்ளார். 2014, 2015 இல் தாவா சொத்தில் வீடு கட்டியபோது எவ்வளவு செலவானது என்று கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பணம் என் தம்பி கனகராஜை கேட்டால்தான் தெரியும் என்றால் சரியல்ல. என் சகோதரர் 2014, 2015 பணம் கொடுத்தார் அதை வைத்துதான் வீடு கட்டினார் என்று என் எதிர்வழக்குரையிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் கணவருக்கு பணம் அனுப்பியதற்கான காரணம் எனக்கு கணக்கு இல்லாததால் என் கணவருக்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவர் அந்த பணத்தை திருப்பி தந்துவிட்டாரா என்றால் இல்லை. எனக்கும் என் கணவருக்கும் இடையே நடந்த முந்தைய வழக்குகளில் என் சகோதரர் பணம் கொடுத்த விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் கணவர் பணம் திரும்ப கொடுக்கவில்லை என்று என் தம்பி கனகராஜ் நடவடிக்கை எடுத்தாரா என்றால் இல்லை. பி.சா.ஆ.2, 3 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யபட்ட ஒன்று என்றால் சரியல்ல. எவ்வளவு நகை எனக்கு திருமணத்தின் போது போட்டார்கள் என்று இந்த வழக்கிலோ முந்தைய வழக்கிலோ பட்டியலிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். எனக்கு தனிபட்ட வருமானம் 2001 முதல் 2003 வரை வருமானம் இருந்ததைகாண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அதுபோல் எந்த

உறவினரிடமிருந்து எவ்வளவு ரூபாய் கடன் தாவா சொத்து வாங்க வாங்கினேன் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் என் பெயரில் உள்ள இடத்தை விற்றும் வாங்கினேன் அந்த பத்திரம் பதிவாகியுள்ளது. என்னிடம் எவ்வளவு சேமிப்பு பணம் இருந்தது என்றும் இன்னையதேதியில் எவ்வளவு உள்ளது என்றும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என்னால் தாக்கல் செய்யபட்ட பி.சா.ஆ.8, 9 என் கணவர் பெயரிலுள்ள வரிரசீதுகள் என்றால் ஆமாம். எனது கணவரின் தாய்மாமா கோவிந்தராஜன் தாக்கல் செய்த வழக்கை பணம் தரவேண்டியதில்லை என்று நான் கட்சி செய்கிறேன் என்றால் ஆமாம். அந்த வழக்கு முடிவு ஏற்படாமல் நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். நான் பணம் கொடுத்து என் பெயரில் வாங்காமல் கணவர் பெயரில் வாங்க காரணம் என்ன என்று எதிருரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருக்கும் நபர்களிடம் நான்தான் வாடகை வாங்குகிறேன் என்றால் ஒரு வீடு வாடகை நான் வாங்குகிறேன் மீதி மூன்று வீடு வாடகைக்கில்லை ஒத்தியில் உள்ளது அதை என் கணவர் இருந்தபோது மாமியாரும், கோவிந்தராஜும் வைத்தார்கள். மேற்படி விஷயத்தை நான் இன்றைக்கு தான் முதல்முறையாக சொல்கிறேன் என்றால் ஆமாம். ஒத்தி குறித்து நான் ஏதேனும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. தாவா சொத்து தொடர்பாக என்னிடம் உள்ள ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். தாவா சொத்து நாளது தேதிவரை என் கணவர் பெயரில் உள்ளதால் வாதிக்கு அதில் பங்கு உண்டு என்றால் வீட்டிற்காக நான் வாங்கிய கடனில் வாதி பங்கு எடுத்துகொண்டால் பாகம் உண்டு. எவ்வளவு கடன் யாரிடம் வாங்கியுள்ளேன் என்று இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சொல்கிறேன் என்றும் கடன் எதுவுமில்லை என்றால் சரியல்ல. வாதி கோரியபடி அவருக்கு பாகஉரிமை உண்டு என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.17 17:09:45 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**